DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -20

| | | |
|---|---|---|
| Name | : செந்தில்நாதன் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 7th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிச்சிப்பாளையம் சன்னியாசிகுண்டு ரோட்டில் வசிக்கிறேன். நான் மெடிக்கல்ஸ்டோரில் வேலை செய்கிறேன். இவ்வழக்கு சம்பவம் நடந்த சமயத்தில் நான் கிச்சிப்பாளையத்திலுள்ள Best medicals என்ற மெடிக்கல்ஸ்டோரில் வேலை பார்த்தேன். ஆனந்த் என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். கூப்பிடும்போது வரவேண்டும் என்று சொன்னார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

02.08.2017 அன்று சம்பவ சமயத்தில் மெடிக்கல் கடை வைத்து தொழில் செய்து வந்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடையில் வேலை செய்ததாகத்தான் சொன்னேன். எனது கடையில் அடிக்கடி மருந்துகள் வாங்க எதிரி ஆனந்தன் வருவார் என்றும் அதனால் எனக்கும் அவருக்கும்

நல்ல பழக்கம் என்றால் சரியல்ல. 02.08.2017 அன்று ஆனந்தன் அவர் வைத்திருந்த இருசக்கர வாகனம் ஆக்டிவா பதிவு எண்.டி.என்.30 ஏ.பி7845 என்னிடம் அடகு வைத்து பணம் வாங்கினார் என்றால் சரியல்ல. ஆனந்தன் அடகு பணத்தை 4, 5 மாதத்தில் ரூ.10000/− த்தை திரும்ப கொடுத்துவிட்டார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 29.11.2014 அன்று போலிசார் கிராமநிர்வாக அதிகாரி மற்றும் உதவியாளருடன் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றும் ஆனந்தன் அவரது நண்பர்களுடன் சேர்ந்து வீராபாண்டியில் ஒரு நபரை கொலை செய்து கூலியாக கிடைத்த பணத்தில் ரூ.10000/− எனக்கு கொடுத்ததாக போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் ரூ.10000/− ஆனந்திடம் வாங்கியதை ஒப்புக்கொண்டு அந்த பணத்தை போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரிடம் பணத்தை ஒப்படைத்த போது கிராமநிர்வாக அதிகாரியும், அவரது உதவியாளரும் இருந்தார்கள் என்றும் நான் பணத்தை கொடுத்ததிற்கு ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் எழுதிக்கொடுத்ததல்ல. போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை.**

Sd/− L. Kalaivani,
III Additional District Judge,
Salem.